இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 60– திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 23 – புதன்கிழமை 09 அக்டோபர் 2024 – மதுரை 20 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 60 : Thiruvalluvar Year - 2055 - Purataasi 23 - Wednesday 09 October 2024 - Madurai 20 Pages ₹ 5.00

## தமிழ்நாட்டில் 47 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு!

# 38,698 கோடி ரூபாய் தொழில் முதலீடுகள்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (8.10.2024) தலைமைச் செயலகத்தில், 17–வது அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல்!

**சென்னை, அக். 9 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 38,698 கோடி ரூபாய் தொழில் முதலீடுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழ்நாட்டில் 47 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.**

சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது. இதில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அனைத்து அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், தமிழ்நாட்டில் 38 ஆயிரத்து 698 கோடி ரூபாய் மதிப்பிலான 14 புதிய முதலீடுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதன்மூலம் 46 ஆயிரத்து 930 பேருக்கு புதிதாக வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழ்நாடு அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து அமைச்சர்கள் தங்கம் தென்னரசு மற்றும் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் செய்தியாளர்களிடம் விளக்கி கூறினர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட முதலீடுகள் குறித்து நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

இம்முதலீடுகள் மின்னணு துறை சார்ந்த பிரின்டெட் சர்க்யூட் போர்டுகள் (PCB), குறைந்த மின்னழுத்த பேனல்கள், மொபைல் ஃபோன் தயாரிப்புகளுக்கான காட்சிமுறை உதிரிபாகங்கள் மற்றும் உறை தயாரித்தல், பயணிகள் சொகுசு வாகன உற்பத்தி, வாகனங்கள் சார்ந்த உதிரிபாகங்கள், உயர் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் அதற்கான மென்பொருட்கள், பாதுகாப்புத் துறைக்கான உபகரணங்கள், மருத்துவத் துறை சார்ந்த ஊசி மருந்துகள் மற்றும் இதர மருந்துபொருட்கள் தயாரிப்பு, தோல் அல்லாத காலணிகள் உற்பத்தி, எரிசக்தி துறை சார்ந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியுடன் பசுமை ஹைட்ரஜன் / பசுமை அம்மோனியா உற்பத்தி, மின்வாகனங்கள் மற்றும் தொலைதொடர்பு நெட்வொர்க்குகள் குறித்த ஆராய்ச்சி & மேம்பாடு போன்ற பல்வேறு துறைகளை உள்ளடக்கியுள்ளது.

இராணிப்பேட்டை மாவட்டத்தில் டாடா குழுமத்தின் துணை நிறுவனமான டாடா மோட்டார்ஸ் லிமிடெட் (ரூ.9000 கோடி முதலீடு, வேலைவாய்ப்பு 5000 நபர்கள்), காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஃபாக்ஸ்கான் குழுமத்தின் துணை நிறுவனமான யூசான் டெக்னாலஜி (இந்தியா) பிரைவேட் லிமிடெட் (ரூ.13180 கோடி முதலீடு, வேலைவாய்ப்பு 14000 நபர்கள்),

தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் PSG குழுமத்தின் துணை நிறுவனமான லீப் கீரின் எனர்ஜி பிரைவேட் லிமிடெட் (ரூ.10375 கோடி முதலீடு, வேலைவாய்ப்பு 3000 நபர்கள்), அரியலூர் மாவட்டத்தில் தைவான் நாட்டைச் சேர்ந்த டீன் ஷூஸ் குழுமத்தின் துணை நிறுவனமான ஃப்ரீடிரெண்ட் இன்டஸ்ட்ரியல் இந்தியா பிரைவேட் லிமிடெட் (ரூ.1000 கோடி முதலீடு, வேலைவாய்ப்பு 15000 நபர்கள்),

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கேன்ஸ் சர்க்யூட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (ரூ.1395 கோடி முதலீடு, வேலைவாய்ப்பு 1033 நபர்கள்), கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் அசென்ட் சர்க்யூட்ஸ் பிரைவேட் லிமிடெட் (ரூ.612.60 கோடி முதலீடு, வேலைவாய்ப்பு 1200 நபர்கள்) ஆகியவை குறிப்பிடத்தக்க முதலீட்டுத் திட்டங்களாகும்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு கூறினார்.

**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேட்டி!**

அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேட்டியில், சாம்சங் நிறுவன ஊழியர்களின் ஒரே ஒரு கோரிக்கையை தவிர, மற்ற அனைத்து கோரிக்கைகளையும் அந்நிறுவனம் ஏற்றுகொண்டதாகவும், முதலமைச்சரின் அறிவுறுத்தலுக்கிணங்க, 10 மணி நேரத்துக்கும் மேலாக தொழிலாளர்களிடம் அமைச்சர்கள் குழு பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தெரிவித்தார்.

## ஜம்மு – காஷ்மீரில்

# காங்கிரஸ் கூட்டணி ஆட்சி அமைகிறது!

**ஜம்மு, அக். 9 -**

**ஜம்மு – காஷ்மீர் மாநிலத்திற்கு 10 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது மூன்று கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று காலை எண்ணப்பட்டன. வாக்கு எண்ணிக்கை தொடங்கியதிலிருந்தே காங்கிரஸ் கூட்டணி அதிக இடங்களைக் கைப்பற்றி ஆட்சி அமைக்கிறது. தேசிய மாநாட்டுக் கட்சி துணைத் தலைவர் உமர் அப்துல்லா முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

இதுபற்றிய விவரம் வருமாறு:-

90 தொகுதிகளைக் கொண்ட ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதில், காங்கிரஸ் தேசிய மாநாட்டு கட்சிகள் அடங்கிய இந்தியா கூட்டணி கட்சி (மூன்று மணி நிலவரப்படி) தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது. 50க்கும் மேற்பட்ட தொகுதிகளில் இந்தியா கூட்டணி முன்னிலை பெற்றுள்ளது. தேசிய மாநாட்டு கட்சி மட்டும் 40 தொகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளன.

இந்நிலையில், ஜம்மு - காஷ்மீரில் குறுக்கு வழியில் ஆட்சியை பிடிக்க பா.ஜ.க முயற்சிக்கக் கூடாது என தேசிய மாநாட்டுக்கட்சி தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான உமர் அப்துல்லா வலியுறுத்தியுள்ளார். மக்களின் தீர்ப்பை பா.ஜ.க., ஏற்றுக் கொள்ள வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார். செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியா கூட்டணியை ஆதரிக்குமாறு மக்கள் ஜனநாயக கட்சி தலைவர் மெகபூபா முஃப்திக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

**அரியானா**

இதேபோல், 90 தொகுதிகளைக் கொண்ட அரியானாவில் அக்டோபர் 5ஆம் தேதி ஒரே கட்டமாகத் தேர்தல் நடைபெற்றது. இந்த இரண்டு தேர்தல்களிலும் பதிவான வாக்குகள் நேற்று காலை முதல் எண்ணப்பட்டு வருகின்றன. அரியானாவில் தொடக்கத்தில் காங்கிரஸ் கட்சி முன்னிலை வகித்து வந்த நிலையில், பின்னர் நேரம் செல்ல, செல்ல பா.ஜ.க.,வும் சம அளவிலான இடங்களை பெற்று மாறி, மாறி முன்னிலை கண்டன. இதனால் அரியானாவில் இரு கட்சிகளுக்கும் இடையே கடும் போட்டி நிலவி வருகிறது. இந்நிலையில், தற்போதைய நிலவரப்படி அரியானாவில் காங்கிரஸ் கட்சி 35 இடங்களிலும், பா.ஜ.க., 49 இடங்களிலும் முன்னிலை வகித்து வருகின்றன.

**காங்கிரஸ் குற்றச்சாட்டு!**

அரியானா சட்டப்பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை முடிவுகளை வெளியிடுவதில், தேர்தல் ஆணையத்திற்கு பா.ஜ.க. நெருக்கடி கொடுப்பதாக காங்கிரஸ் குற்றஞ்சாட்டியுள்ளது.

அரியானா சட்டமன்ற தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வரும் நிலையில், காலை வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் உடனுக்குடன் வெளிவந்தன. பின்னர் காலை 10 மணிக்கு மேல் காங்கிரஸ் முன்னிலை என செய்திகள் வெளியானதையடுத்து, வாக்கு எண்ணிக்கை முடிவுகளை தேர்தல் ஆணையம் தாமதமாக வெளியிட்டு வருகிறது.

இது குறித்து டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ், வாக்கு எண்ணிக்கையில் இதுவரை 11சுற்றுகள் முடிந்துள்ள நிலையில் ஐந்து சுற்றுகளுக்கான முடிவுகளை மட்டுமே, தேர்தல் ஆணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். வாக்கு எண்ணிக்கை முடிவுகளை வெளியிட, தேர்தல் ஆணையத்திற்கு பா.ஜ.க. நெருக்கடி கொடுப்பதாக குற்றஞ்சாட்டிய ஜெய்ராம் ரமேஷ், வாக்கு எண்ணிக்கை முடிவுகளை வெளியிட தேர்தல் ஆணையம் தாமதம் செய்வது ஏன் என்றும் கேள்வி எழுப்பினார்.

## வளர்ச்சிப் பணிகளைத் துரிதப்படுத்திட

# 14 மாவட்டங்களுக்கு பொறுப்பு அமைச்சர்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, அக்.9-**

**மாவட்ட வளர்ச்சிப் பணிகளைத் துரிதப்படுத்திட 14 மாவட்டங்களுக்குப் பொறுப்பு அமைச்சர்களை நியமித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழ்நாட்டில் மாவட்ட வளர்ச்சிப் பணிகளைத் துரிதப்படுத்தவும், பொதுமக்களுக்குச் சென்றடைய வேண்டிய நலத்திட்ட உதவிகளைக் கண்காணிக்கவும், இயற்கைச் சீற்றம், நோய்த்தொற்று இன்னபிற நேரங்களில் அவசரகாலப் பணிகளைக் கூடுதலாக மேற்கொள்ளவும் அமைச்சர் பெருமக்கள் சிலரை, சில மாவட்டங்களுக்குப் பொறுப்பு அமைச்சர்களாக நியமித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

அதன்படி. வருவாய் மாவட்ட வாரியாக பின்வரும் அமைச்சர்கள் பொறுப்பு அமைச்சர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலி மாவட்டத்திற்கு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு அவர்களையும்;

தேனி மாவட்டத்திற்கு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி அவர்களையும்;

திருப்பத்தூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களுக்கு பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு அவர்களையும்;

தருமபுரி மாவட்டத்திற்கு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களையும்;

தென்காசி மாவட்டத்திற்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்களையும்;

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களையும்;

நீலகிரி மாவட்டத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்களையும்;

கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களையும்;

கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அவர்களையும்;

காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி அவர்களையும்;

பெரம்பலூர் மாவட்டத்திற்கு போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களையும்;

நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களையும்;

மயிலாடுதுறை மாவட்டத்திற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் அவர்களையும் நியமித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.